# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE (ECHO GROUP)

*India's National Spiritual Newspaper*

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVII | YEAR OF OUR LORD JESUS CHRIST, MARCH 2022 | No. 3


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### சங்கீதம் 97:1-9

1. **கர்த்தர்** ராஜரிகம்பண்ணுகிறார்: பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது.

2. மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது; நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்.

3. அக்கினி அவருக்கு முன்சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது.

4. அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி அதைக் கண்டு அதிர்ந்தது.

5. **கர்த்தரின்** பிரசன்னத்தினால் பர்வதங்கள் மெழுகுபோல உருகிற்று, சர்வ பூமியினுடைய ஆண்டவரின் பிரசன்னத்தினாலேயே உருகிப்போயிற்று.

6. வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது; சகல ஜனங்களும் அவருடைய மகிமையைக் காண்கிறார்கள்.

7. சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப் பெருமை பாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக; தேவர்களே, நீங்களெல்லாரும் அவரைத் தொழுதுகொள்ளுங்கள்.

8. சீயோன் கேட்டு மகிழ்ந்தது; **கர்த்தாவே,** உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந்தார்கள்.

9. **கர்த்தாவே,** பூமி முழுவதுக்கும் நீர் உன்னதமானவர்; எல்லாத் தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர்.

## திராட்சச்செடி, அத்திமரம், ஒலிவமரம்!

**சகோ. எம். பால்ராஜ்**



திராட்சச்செடி, அத்திமரம், ஒலிவமரம் இவை மூன்றும் இஸ்ரவேல் மக்களின் ஜீவியத்தில் பின்னிப் பிணைந்தவை. இது, தமிழ்நாட்டில் நெல், தென்னை மற்றும் வாழை எப்படி தமிழ் மக்களின் ஜீவியத்தோடு இணைந்தவையோ, அது போன்றது! இஸ்ரவேல் நாடு, மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த தேசம். இது வானத்தின் மழையைக் குடித்து வாழும் தேசம்! இந்த தேசம், இஸ்ரவேல் மக்கள் 430 வருடம் அடிமைகளாக இருந்த எகிப்தைப் போன்று அல்ல. அங்கு அவர்கள் தங்கள் விதையை நிலத்தில் விதைத்து கீரைத் தோட்டத்திற்கு காலால் நீர் பாய்ச்சுவது போன்று மற்றப் பயிரினங்களுக்கும் பாய்ச்சுவார்கள்! எகிப்து, நைல் நதியால் போஷிக்கப்படுகிறது! (உபாகமம் 11:10,11).

மேலே குறிப்பிடப்படுள்ள மூன்று செடி/மரங்களும் இஸ்ரவேல் நாட்டின் முக்கிய வாழ்வாதாரங்கள் ஆகும். ஆபகூக் தீர்க்கதரிசி தன்னுடைய புத்தகத்தில் எல்லாமே இழந்து போனாலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என்று தனது விசுவாசத்தை அறிக்கையிடுவதைப் பார்க்கிறோம்:

**"அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்"** (ஆபகூக் 3:17,18). இவை இஸ்ரவேல் மக்களின் ஜீவியத்தைப் பாதுகாப்பவை!

இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தின்போது இந்த செடி/மரங்களைப் பற்றி அடிக்கடிக் குறிப்பிடுவார். இயேசு சொன்னார்:

**"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது"**

(யோவான் 15:5).

திராட்சரசம் இஸ்ரவேலின் திருமண இல்லங்களில் ஒரு முக்கியமான உணவுப்பொருள். இயேசுவின் தாயாரும், இயேசுவும், அவர் சீஷர்களும் கானாவூர் கல்யாண வீட்டிற்கு அழைக்கப்பட்டதையும், அங்கு திராட்சரசம் குறைவுபட்ட சம்பவத்தையும், இயேசு தமது முதலாம் அற்புதத்தால் குறைவை நிறைவாக்கினதையும் பார்க்கிறோம் (யோவான் 2:1,2).

மத்தேயு 24:32ல், அத்திமரம் துளிர்விட்டதை இயேசு சுட்டிக்காட்டி, இது கோடைக்காலம் விரைவில் வரவிருப்பதற்கு அடையாளம் என்றார். நோவா, இரண்டாம் முறையாக பேழையிலிருந்து ஒரு புறாவைத் திறந்து விட்டபோது, அது தன் வாயில் ஒரு அத்தி மரத்தின் இலையைக் கொத்திக் கொண்டு வந்தது (ஆதியாகமம் 8:11). இரவு போஜனம் பண்ணின பின்பு ஒரு பாடல் பாடியதும் இயேசுவும், சீஷர்களும் ஒலிவ மலைக்குச் சென்றார்கள் (மாற்கு 14:26). ஆக, திராட்சச்செடி, அத்திமரம் மற்றும் ஒலிவமரம்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

"... பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று" - (ஏசாயா 58:14).



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**

**Angeline Selvakumari Henry,** M.A., M.Ed.

**MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

**Bro. N. Prakasam,** M.A., General Manager

**EDITORIAL BOARD**

**Sis. Jesy Veena Sam**
**Bro. M. Paulraj,** M.A., B.Ed.
**Sis. Serena Bevin,** M.A., M.Phil., B.Ed.



**EDITOR, PUBLISHER & PRINTER**

**Pastor S. SAM SELVA RAJ**
**Echo of His Call Printers**
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
**Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766**
**Cell : (+91) 98410 71852, 95661 31858**

**E.mail ID**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com


கிறிஸ்துவுக்குள் அன்பான நண்பர்களே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையில்லாத நாமத்தில் உங்களுக்கு எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய கிருபையால் நீங்களும், உங்களுக்கு அன்பானவர்களும் நலமுடன் இருப்பீர்கள் என்று நம்புகிறோம். நானும் எனது உடன் ஊழியர்களும், உங்களையும் உங்கள் தேவைகளையும் கிருபையின் சிங்காசனம் முன்பாக ஒவ்வொரு நாளும் கொண்டு செல்லுகிறோம். பெரிய அழிவுகள் உலகெங்கும் இக்காலங்களில் நடந்து வருவதால் உங்களுக்கு விசேஷ பாதுகாப்பு தேவை என்று அறிவோம். எல்லா தேசத்து மக்களும் ஒருவித பயத்திற்குள் வாழ்ந்து வருகிறார்கள்.

அநேக சகோதர, சகோதரிகளிடமிருந்து எங்களுக்கு ஜெப விண்ணப்பங்கள் வருவதுண்டு. ஒரு தபால் அட்டை மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ கடிதம் அல்லது மின் அஞ்சல் மூலமாகவோ எங்களுக்கு வரும் எல்லா ஜெப விண்ணப்பங்களையும், ஒன்றையும் தவறவிடாமல் அவற்றில் கூறப்பட்டத் தேவைகளுக்காக நாங்கள் ஜெபித்து வருகிறோம். உங்களைப் போன்ற எல்லா சகோதர, சகோதரிகளின் வாழ்விலும் தேவன் உண்மையாகவே கிரியை செய்து வருகிறார்.

இந்நாட்களில் உலகமெங்கிலும் பரவி வரும் கொரோனாத் தொற்று வியாதியாலும் அதின் விளைவுகளாலும் அநேக தேவ ஊழியர்கள், தங்கள் ஊழியங்களின் வேகத்தைக் குறைத்துள்ளனர். அவர்களில் ஒருவரா நீங்கள்?

அது சரியல்ல. கடந்த நாட்களில் உங்கள் ஜெபங்களினால் நடைபெற்ற அருமையான காரியங்களை நீங்கள் நினைவுகூர வேண்டும். உங்கள் ஜெப இன்மையினாலும், உங்கள் சபையை அலட்சியப்படுத்தியதாலும் ஒருவேளை உங்களில் சிலர் பாதிக்கப்பட்டிருக்கலாம். விசுவாசிகள் தங்கள் போதகரை அலட்சியப்படுத்தியதாலும், தங்கள் காணிக்கை தசமபாகங்களில் உண்மையாயில்லாததாலும், நமது பாதுகாப்பாளராகிய இயேசு கிறிஸ்துவை துக்கப்படுத்தவோ மறுதலிக்கவோ செய்திருந்ததால் பாதிப்பிற்குள்ளாகியிருக்கலாம். பின்வரும் இந்த வார்த்தையின் மூலமாய் தேவன் உங்கள் ஆவியை உயிர்ப்பித்து இத்தகைய நிலைமையிலிருந்து எழுந்து முன்னேறச் செய்வாராக! இக்காரணங்களின்றியும் ஒருவேளை சிலர் பாதிக்கப்படலாம். தேவன் சில வேளைகளில் நல்லோரையும் தீயோரையும் சில சோதனைகளைக் கடந்துசெல்ல அனுமதிக்கிறார். யோபு சோதிக்கப்பட்டாரல்லவா?

இந்த உலகத்தின் ஆபத்துகளிலிருந்து தேவன் உங்கள் வாழ்க்கையைக் பாதுகாத்து வருவதால், நன்றியுள்ள இருதயத்துடன், உங்களது ஆவிக்குரிய கிரியைகளை மீண்டும் செய்யத் தொடங்குங்கள். உங்கள் தேவைகளையெல்லாம் அவர் நிச்சயமாகவே சந்திப்பார். வருகிற நாட்களில் கனியுள்ள வாழ்வு வாழ தேவன் உங்களை வழிநடத்துவார். நாங்கள் எங்கள் ஜெபங்களில் உங்களைத் தாங்குகிறோம்.

இந்த உலகத்தை நியாயம் தீர்க்க, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வெகு விரைவில் இருக்கிறது என்பதைத்தான் இவ்வுலகில் தற்போது நடக்கும் சம்பவங்கள் நினைவுபடுத்துகின்றன. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் நாம் ஒவ்வொருவரும் நிற்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள வாழ்க்கை வாழ உங்களை அர்ப்பணியுங்கள். உங்களுக்குத் தேவையான கிருபைகளை தேவன் அருள்வாராக!

**அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தொடர்ந்து ஜெபித்து தாங்கும்படியாய் தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம். நிச்சயமாகவே, தங்களது ஜெபங்களுக்கும் மற்றும் ஆதரவிற்கும் ஏற்ற ஒரு தருணமாகவே இக்காலகட்டம் அமைந்துள்ளது. நமது துணை

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

*ஊழியர்களான சகோ. எம். பால்ராஜ் மற்றும் போதகர் எம். முத்து அவர்களுக்காகவும், அவர்கள் விரைவில் சுகம் பெறும்படியாகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.*

*நமது சபைகளையும், பள்ளியையும், தங்கும் வசதியுடன் அமைந்துள்ள வேதாகமக் கல்லூரிகளையும் மறுபடியும் தொடங்க இருக்கிறோம். இவையனைத்தும் நன்றே இயங்கிட தொடர்ந்து ஜெபியுங்கள். மேலும் பெரிய அளவில் பாதிப்புகளை உண்டாக்கிவரும் தொற்றுநோய் முற்றிலுமாக அழிந்து, உலகமெங்குமுள்ள மக்கள் பழைய நிலைமையை அடையும்படி தயவாய் ஜெபியுங்கள்.*

*உங்களுக்கு நேரமிருக்கும்போது,* **அழைப்பின் எதிரொலி யூடியூப் (YouTube)** *சேனலைப் பார்த்து புதிய செய்திகளை அறிந்து கொள்ளுங்கள். முடிந்தால் subscribe பண்ணுங்கள். உங்களை அதிகமாய் நேசிக்கிறோம். உங்களது நலனில் சந்தோஷப்படுகிறோம்.*

*கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858, மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இஸ்ரவேல் மக்களின் ஜீவியத்தில் பிரிக்க முடியாதவை.

## திராட்ச்செடி!

நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக் கொடியைக் கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர்.

அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர்; அது வேரூன்றி, தேசமெங்கும் படர்ந்தது.

அதின் நிழலால் மலைகளும், அதின் கிளைகளால் திவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டது.

அது தன் கொடிகளைச் சமுத்திரமட்டாகவும், தன் கிளைகளை நதி மட்டாகவும் படரவிட்டது.

**இப்பொழுதோ வழிநடக்கிற யாவரும் அதைப் பறிக்கும்படியாக, அதின் அடைப்புகளை ஏன் தகர்த்துப்போட்டீர்?**

**காட்டுப்பன்றி அதை உழுது போடுகிறது, வெளியின் மிருகங்கள் அதை மேய்ந்து போடுகிறது.**

**சேனைகளின் தேவனே, திரும்பி வாரும், வானத்திலிருந்து கண்ணோக்கிப் பார்த்து, இந்தத் திராட்சச் செடியை விசாரித்தருளும்** (சங்கீதம் 80:8–14).

தேவனாகிய கர்த்தர் எகிப்திலிருந்து ஒரு திராட்சச் செடியைக் கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு அதை கானான் தேசத்தில் நாட்டினார். அது நல்ல கனிகளைக் கொடுக்கும் என்று கர்த்தர் எதிர்பார்த்தார். ஆனால், அதுவோ, கெட்ட கனிகளைக் கொடுத்தது. அது ஆழமாய் வேரூன்றி தேசத்தை நிரப்பிற்று. அதன் செல்வாக்கு தேசங்களில் பரவி ஆளுகை செய்தது. கர்த்தர் அதன் அடைப்புகளை தகர்த்துப் போட்டதால் அங்கு கடந்து சென்ற மக்கள் தங்கள் இஷ்டம்போல் பழங்களைப் பறித்துப் போட்டார்கள். காடிகளும் காட்டு மிருகங்களும் அவற்றைப் பிடுங்கிப் போட்டன. தீர்க்கதரிசியான ஆசாப் இதனைக் கண்ணோக்கிப் பார்த்து கர்த்தாவே இந்த திராட்சச் செடியை விசாரித்தருளும் என்று கெஞ்சுகிறார்.

சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேல் வம்சமே! (ஏசாயா 5:7). தேவனாகிய கர்த்தர் தெரிந்தெடுக்கப்பட்ட தமது ஜனத்தை அடிமை வீடாகிய எகிப்திலிருந்து மோசேயின் தலைமையில் வழி நடத்தி வந்தார். கானானில், கானானியர்களைத் துரத்திவிட்டு தமது ஜனங்களை கர்த்தர் குடியேறச் செய்தார். அவர்கள் அங்கு பலுகிப் பெருகி பலத்த ஜாதியாக தாவீதின் காலத்தில் ஆனார்கள். அவன் தனது சத்துருக்களை மேற்கொண்டு அவர்களைப் பகுதி (thrift) கட்டச்செய்தான். இஸ்ரவேலின் செல்வாக்கு தேசங்களின் மத்தியில் பிரபலமானது. ஆனால், அதன் செல்வாக்கு சாலொமோன் ராஜ்யபாரம் பண்ணும்போதே சரிய ஆரம்பித்தது. அவனது வெளிநாட்டு மனைவிகள் அவனை சேனைகளின் தேவனாகிய கர்த்தரிடமிருந்து விலக்கி அந்நிய தேவர்களுக்கு நேராய் அழைத்துச் சென்றனர். சாலொமோனின் குமாரன் ரெகொபெயாம் காலத்தில் தேசம் இஸ்ரவேல் என்றும் யூதா என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

இஸ்ரவேல், சமாரியாவைத் தலைநகராகவும் யூதா, எருசலேமைத் தலைநகராகவும் கொண்டன. யெரொபெயாம், இரண்டு பொற்கன்றுக்குட்டிகளைச் செய்து, ஒன்றை தாணிலும் இன்னொன்றை பெயர்செபாவிலும் நிறுவி, இவைதான் உங்களை எகிப்திலிருந்து அழைத்து வந்த தெய்வங்கள் என்றும் அவற்றைத் தொழுது கொள்ள ஏவினான். பார்வோனின் கரங்களிலிருந்து தமது வல்லமையினாலும் ஓங்கிய புயத்தினாலும் விடுவித்து வழிநடத்தி வந்த தேவாதி தேவனைத் தள்ளிவிட்டான்! இஸ்ரவேலர், மோசேயினாலும் யோசுவாவினாலும் வழிநடத்தப்பட்டு வந்தாலும் தேவனாகிய கர்த்தரே அவர்களை வழிநடத்தி, ராஜாக்களைத் தள்ளி வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட கானான் தேசத்தில் கொண்டு சேர்த்தார். இந்த ஜனங்கள் நாளடைவில் தேவனாகிய கர்த்தரை தள்ளிவிட்டு அன்னிய தேவர்களைத் தழுவிக்கொண்டார்கள். இவர்கள் பச்சையான எல்லா மரத்தடியிலும், உயர்ஸ்தலங்களிலும், விக்கிரகங்களை நட்டு அவற்றைத் தொழுது கொண்டார்கள். இந்த துரோகத்தில் (treachery) இஸ்ரவேல் யூதாவை முந்திக் கொண்டது! தேவனாகிய கர்த்தர் தமது உக்கிர கோபத்தில் இஸ்ரவேலையும், யூதாவையும் அன்னிய ராஜாக்கள் கையில் விற்றுப்போட்டார்! கி.மு. 722ல், இஸ்ரவேலை அசீரியர்களும் கி.மு. 586ல் பாபிலோனியரும் வாரிக்கொண்டு சென்றார்கள். இக்காரியங்கள் சம்பவித்தது ஏன் என்றால் இவர்கள் சர்வவல்ல தேவனை தள்ளிவிட்டு அன்னிய தேவர்கள் பின்னால் சென்றதாலே! கர்த்தர் தமது பாதுகாப்பை இத்தேசங்கள் மேலிருந்து எடுத்துப் போடவே அவை மண்மேடுகளாயின; ஆசாப், இடிந்து கிடந்த மண்மேடுகளைப் பார்த்துப் புலம்பினான்!

**Statement about ownership and other particulars about the Newspaper Echo of His Call (Tamil) - Form IV (See Rule 8)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | **New No. 8 & 10, Old No. 18 & 19, Mohammed Abdullah Sahib 2nd Street, Chepauk, Chennai - 600 005.** |
| 2. Periodicity | : | **Monthly** |
| 3. Printer, Editor, Owner & Publisher | : | **S. Sam Selva Raj** (Same Address) |
| 4. Nationality | : | **Indian** |

I **S. Sam Selva Raj**, hereby that the particulars given above are true to the best of my knowledge and belief.

**March 2022** **S. Sam Selva Raj.**

நல்ல கனி கொடுக்க வேண்டிய திராட்சச் செடி கெட்ட கனிகளைக் கொடுத்ததால் அழிவைக் கண்டது. நாமும் நல்ல கனிகளைக் கொடுக்க அழைக்கப் பட்டிருக்கிறோம். நல்ல கனி கொடாவிட்டால் வெட்டுண்டு அக்கினியில் போடப்படுவோம், ஜாக்கிரதை! (மத்தேயு 3:10).

இந்நாட்களிலும் ஜனங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் தேவனிடத்தில் வருகிறார்கள். கொஞ்சகாலம் பிரகாசிக்கிறார்கள். பின்பு கர்த்தரை விட்டு சாத்தானின் அரவணைப்புக்குள் சென்று விடுகிறார்கள்! சாத்தான் திருடவும், கொல்லவும், அழிக்கவுமே வருகிறான் என்பதை அறியாமல் அழிவிற்கு நேராய் தீவிரிக்கிறார்கள் (யோவான் 10:10). சாத்தானின் தந்திரங்களை அறிந்து விழித்திராவிட்டால் நம் முற்பிதாக்கள் சந்தித்த அழிவை நாமும் சந்திக்க நேரிடும்.

நல்லப் பழங்களைக் கொடுக்கும் திராட்சச்செடி நேசிக்கத்தக்க நல்ல செடி! இது பருவக்காலங்களில் (seasons) கனிதரும் செடி. தோட்டக்காரர் நிலத்தை பண்படுத்தவும், கொத்தி எரு போடவும் கடினமாக உழைக்கிறார். கொடி வளரும்போது அது படர பந்தல் அமைத்துத் தர வேண்டும். கனி கொடா கிளைகளை அறுத்துப் போட்டு, கனிதரும் கொடிகளை நன்றாக வளர விட வேண்டும். தோட்டக்காரர் கனி தரும் கிளைகளையும் / கொடிகளையும், கனிகொடா கிளைகளையும் / கொடிகளையும் நன்கு அறிவார். இயேசு சொன்னார்:

**நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்** (யோவான் 15:1,2).

திராட்சச் செடியைப் போன்றே இந்தியாவிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலும் வெற்றிலைத் தோட்டம் பராமரிக்கிறார்கள். எனது சொந்தக்காரர் ஒருவர் தனது நிலத்தில் வெற்றிலைத் தோட்டம் ஒன்றினைப் பராமரித்து வந்தார். இத்தோட்டம் அமைக்க அவர் அப்பகுதி நிலத்தைத் 4–5 அடி ஆழத்திற்குத் தோண்டி மேல் மண்ணை (top soil) அப்படியே எடுத்துப் போட்டுவிட்டு, நிலத்தை நன்கு கொத்திவிட்டு அதில் பிற பகுதிகளிலிருந்து வண்டல் மண்ணும் மணலும் கொண்டு வந்து 2–3 அடிக்கு நிரப்புவார். இத்தோட்டத்திற்கு வெளியேயிருந்து அன்னிய மரங்களின் வேர்கள் வராமலிருக்கக் கவனமாயிருப்பார். பண்படுத்தப்பட்ட இடத்தில் நேர்க்கோட்டில் ஆழக்குழி எடுத்து வெற்றிலைக் கொடி விதையை நடவு செய்வார்கள். இது வெற்றிலைக் கொடியின் ஒரு பகுதியே! தேவையான அளவு நீர்பாய்ச்சுவார்கள்; தண்ணீர் செடியின் அடிப்பகுதியில் தேங்காமல் பார்த்துக் கொள்வார்கள். நடவு செய்த கொடிகள் துளிர்த்து வளர ஆரம்பிக்கும். வளர்ந்த கொடியை கொழுகொம்பில் இணைத்துக் கட்டுவார்கள். தோட்டத்திற்குள் நாட்டப்படும் கொழுகொம்பு பொதுவாக இலவ மரம், முருங்கை மரம் மற்றும் முருக்கு மரமாக இருக்கும். இவை பச்சையானக் கொம்புகளாக இருப்பதால் இவைகளும் தோட்டத்தில் ஓங்கி வளரும். இலவ மரம் பெரிய மரமாக வளர்ந்து காய் காய்க்கும். இதன் காய் பழுப்பதில்லை, முதிர்ந்தவுடன் காய்ந்துவிடும். இதனை எடுத்து அதற்குள் இருக்கும் பஞ்சை தலையணை மற்றும் மெத்தைகள் செய்வார்கள். மரத்தை படகு செய்ய பயன்படுத்துவார்கள். முருங்கை மரம் மக்களால் அதிகமாக நேசிக்கப்படும் ஒன்று! இதன் இளம் இலைகள் நல்ல மருத்துவ குணம் உள்ளது. இதனை கீரையாகப் பயன்படுத்துவார்கள். இளம் காய் (drumstick) கூட்டு, குழம்பு செய்ய பயன்படுத்துவார்கள். விரும்பத்தக்க கூட்டும் குழம்பும் இதிலிருந்து கிடைக்கும்! முருக்கு மர இலைகள் பிராணிகளுக்கு உணவு, வயல்களுக்கு எரு. மரம் பெரிதாயிருந்தால் படகு கட்டுவதற்குப் பயன்படுத்துவார்கள். சிலர் தோட்டத்தின் ஓரத்தில் வாழைப் பயிரிடுவார்கள். இது அவ்வப்போது நல்ல பலன் கொடுக்கும்.

வெற்றிலை பணம் தரும் (cash crop) தோட்டப் பயிர். இது மருந்திற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இளம் இலைகளை சில மக்கள் பாக்கு, சுண்ணாம்புடன் சுவைத்து மகிழ்கிறார்கள்! சிலர் அதற்கு அடிமையும் (addicted) ஆகிவிடுகிறார்கள்!

வெற்றிலைத் தோட்டத்திற்கு சுத்தம் காக்கப்பட வேண்டும். ஆகவே, தோட்டத்திற்குள் யார் யார் எப்போது போகலாம் என்பதை தோட்டக்காரர் விழிப்புடன் கவனித்துக் கொள்வார்! வெற்றிலைத் தோட்டம் நல்ல வருமானம் தரும்!

## திராட்சத்தோட்டத்தில் அத்திமரம்!

திராட்சத்தோட்டத்தில் அத்திமரம் நிற்பதை இயேசு தமது சீஷர்களிடம் எடுத்துக்கூறினார். அத்திமரத்தில் பழம் இருக்கிறதா? எனப் பார்வையிட்டார். ஆனால் இலைகள் மட்டும்தான் இருந்தன! தோட்டக்காரர் அத்திமரத்தில் பழம் இருக்கிறதா? என்பதை மூன்று வருடங்களாகக் கவனித்து வந்தார். ஆனால் அதில் பழம் ஏதும் இல்லை. தோட்டக்காரர் வேலைக்காரனைப் பார்த்து, “இந்த மரத்தை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது” என்றார். அதற்கு

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகம முழு நேரக் கல்லூரி, சென்னை.

போதனா மொழி : இந்தி

Registered Candidate for Membership

Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்

Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்

உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும்
**துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2022 மார்ச்19 முதல் ஏப்ரல் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

மார்ச் 19 ➲ நமது இணை ஆசிரியர் சகோ. M. பால்ராஜ் மற்றும் நெகேமியா வேதாகமக் கல்லூரி நிர்வாகத் தலைவர் போதகர் M. முத்து அவர்களையும் கர்த்தர் பாதுகாத்தமைக்காக கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 20 ➲ நமது வேதாகமத் தபால்வழிக் கல்வி மற்றும் அஞ்சல்வழி இறையியல் கல்விகளை ஆசீர்வதித்து வரும் கர்த்தரைத் துதிப்போம்..

மார்ச் 21 ➲ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 22 ➲ சுவிசேஷம் சென்றடையாத பல இடங்களுக்கு நமது பத்திரிகை ஊழியத்தின் மூலமாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட கிருபை பாராட்டின கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 23 ➲ கடந்த மாதத்தில் நமது தேவைகளை நிறைவாக்கிய கிருபைமிகு கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 24 ➲ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டின கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 25 ➲ நமது **அழைப்பின் எதிரொலி**யின் இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 26 ➲ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களை ஆசீர்வதித்து வரும் கர்த்தரை நன்றியோடு துதிப்போம்.

மார்ச் 27 ➲ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காக நன்றியோடு கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 28 ➲ நமது சுவிசேஷ அச்சகத்தின் தொடர்பணிகளுக்காகவும், அதற்கு உறுதுணையாக உள்ள திறமைவாய்ந்த பணியாளர்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 29 ➲ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும், அவர்களது குடும்பத்தினர்களுக்காகவும் கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 30 ➲ கோவிட்–19 மத்தியிலும் நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

மார்ச் 31 ➲ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஏப்ரல் 01 ➲ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஏப்ரல் 02 ➲ நம் நாட்டினைக் காத்துவரும் கர்த்தரைத் துதிப்போம்.

ஏப்ரல் 03 ➲ நமது தலைமைப் போதகர் மற்றும் அவர்களது குடும்பத்தினரை எல்லாவிதமான தீய வல்லமைகளுக்கும் விலக்கி காத்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஏப்ரல் 04 ➲ நமது ஆங்கில இணை ஆசிரியர் சகோ. M. பால்ராஜ் மற்றும் நெகேமியா வேதாகமக் கல்லூரியின் நிர்வாகத் தலைவர் போதகர் M. முத்து அவர்கள் பூரணசுகம் பெற ஜெபிப்போம்.

ஏப்ரல் 05 ➲ உலக நாடுகள் அனைத்திலும் ஒற்றுமையும் சமாதானமும் நிலைத்திருக்க வேண்டி ஜெபிப்போம்.

ஏப்ரல் 06 ➲ நமது தலைமைப் போதகர் தமது சுயசரிதையை தங்குதடையின்றி எழுதி முடிக்க ஆசீர்வதிக்க வேண்டி கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஏப்ரல் 07 ➲ நமது நிறுவனத்திற்காகவும், நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.

ஏப்ரல் 08 ➲ நமது ஹிந்தி இணையவழி வேதாகமக்கல்விமுறை வகுப்புகளுக்காக ஜெபிப்போம்.

ஏப்ரல் 09 ➲ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களின் செயல்பாட்டிற்காகவும், அவற்றின் விஸ்தீரணங்களுக்காகவும் கர்த்தரிடம் ஜெபிப்போம்.

ஏப்ரல் 10 ➲ உலகை விட்டு கொரோனா மற்றும் ஒமிக்ரான் நச்சுக்கிருமிகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டி ஜெபிப்போம்.

ஏப்ரல் 11 ➲ போதை பழக்கமுள்ளோர் மற்றும் தீயசெயல்களில் ஈடுபடுவோர் அவற்றினின்று விலகி நல்வாழ்வு வாழவேண்டி ஜெபிப்போம்.

ஏப்ரல் 12 ➲ நமது அனைத்து பொருளாதார மற்றும் சுகஜீவனுக்கான தேவைகளும் சந்திக்கப்பட வேண்டி கர்த்தரிடம் மன்றாடுவோம்.

ஏப்ரல் 13 ➲ நமது நாடு ஒற்றுமையிலும் மற்றும் முன்னேற்றத்திலும் பலப்பட வேண்டி ஜெபிப்போம்.

ஏப்ரல் 14 ➲ நமது வடஇந்திய ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது சுக வாழ்வுக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபிப்போம்.

ஏப்ரல் 15 ➲ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஏப்ரல் 16 ➲ அனைத்து சமயங்களின் ஒற்றுமைக்காக தேவனிடத்தில் ஜெபிப்போம்.

ஏப்ரல் 17 ➲ நமது ஊழியங்கள் எல்லாவகையிலும் மற்றும் செயல்பாடுகளிலும் விரிவாக்கம் பெற்றிட கர்த்தரை நோக்கி ஜெபிப்போம்.

ஏப்ரல் 18 ➲ நம் ஊழியர்களுக்கான ஊதியங்கள், காகிதம், தபால், போக்குவரத்து ஆகியவற்றிற்கான பொருளாதாரத் தேவைகளை தேவன் சந்திக்க ஜெபிப்போம்.

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

வேலைக்காரன், “ஐயா! இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி எருப் போடுவேன், கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப் போடலாம் என்று சொன்னான் என்றார்.

கனி கொடுப்பதின் அவசியத்தை இயேசு சுட்டிக் காட்டினார். இதனை இயேசு ஒரு உவமையாக எடுத்துக் காட்டியதைப் பார்க்கிறோம் (லூக்கா 13:6–9). அத்திமரம் திராட்சத் தோட்டத்தில் நடப்பட்டிருப்பது அதன் தகுதிக்கு மிஞ்சியது. காரணம், திராட்சத்தோட்டத்திற்கு கூடுதல் கவனிப்பும் பராமரிப்பும் அவசியம். ஆனால், அத்திமரம் அங்கு நின்று வளர்வதை நியாயப்படுத்தக் கனிகள் கொடுத்திருக்க வேண்டும்!

திராட்சத்தோட்டம் கர்த்தரின் ஜனமாகிய இஸ்ரவேலரைக் குறிக்கிறது. அத்திமரம் புறஜாதியினரைக் குறிக்கிறது. புறஜாதியினர் இஸ்ரவேலரின் சுதந்தரத்திற்குள் புகுந்தவர்கள்! புறஜாதியினரும் கனிகள் தர வேண்டும் என கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தரின் நியமம் (law) என்னவென்றால் கனி கொடாதமரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்! (மத்தேயு 3:10). அத்திமரம் நிலைத்திருக்க கனி தரவேண்டும்.

தோட்டக்காரர் இயேசு கிறிஸ்து. வேலைக்காரன் தோட்டக்காரரிடம், மேலும் ஒரு வருடகாலம் இந்த அத்திமரம் நிற்கட்டுமென்றும் அக்காலத்தில் அதைச் சுற்றி கொத்தி எருபோடலாம் என்றும் சொன்னது, பரிசுத்தாவியை ஜனங்கள் மீது தேவன் ஊற்றியதற்கு சமமாகும். புறஜாதியினர் பரிசுத்தாவியைப் பெற்று பெலனடைந்து கனிகொடுக்க உதவிச் செய்வதாகும். இயேசு ஜனங்களைப் பார்த்து, “நீங்கள் கூடுதல் கனிகொடுக்க எனக்குள் நிலைத்திருங்கள்” என்றார் (யோவான் 15:5).

தேவனாகிய கர்த்தர் தமது சிங்காசனத்தில் பரலோகத்தில் இருக்கிறார். அவருடைய கண்கள் மனுப்புத்திரரைப் பார்க்கிறது; அவருடைய இமைகள் அவர்களை சோதித்தறிகிறது (சங்கீதம் 11:4). கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் மனுப்புத்திரரை நீதியோடும் உண்மையோடும் நியாயம் தீர்ப்பார்!

**அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் (சங்கீதம் 96:13).**

புறஜாதியினரை இருளிலிருந்து மீட்டெடுக்க கர்த்தர் ஒரு சிறப்புத் திட்டத்தை வைத்திருந்தார். சாத்தானின் பிடியில் சிக்கியிருந்த மக்களை மீட்டெடுக்க, தேவனாகிய கர்த்தர் தமது ஒரே பேறான குமாரனை கிரையமாக கொடுக்க இப்பூமிக்கு அனுப்பினார். இயேசு தமது குற்றமற்ற இரத்தத்தை சிலுவையில் சிந்தியதால் ஒவ்வொருவருக்குமான கிரையத்தைக் கொடுத்துவிட்டார்! சிலுவையில் தொங்கி மரித்த இயேசுவை நோக்கி ஒருவர் பார்த்து பாவத்தை அறிக்கை செய்தால் அவர் அவர்களுடைய பாவத்தை மன்னித்து தமது சொந்த மகனாக/மகளாக மாற்றுகிறார் (யோவான் 1:12, 3:16).

தேவனாகிய கர்த்தர், தமக்கு எதிர்ப்பாளராக (rebel) செயல்பட்ட பவுல் என்பவரை வேறுபிரித்து புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்க ஏற்படுத்தினார். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் இரட்சிப்படைய வேண்டுமென்பதுதான் தேவனுடைய சித்தமாயிருக்கிறது! ஆனால், தமது சொந்த ஜனமாகிய இஸ்ரவேலரோ அவரை ஏற்றுக் கொள்ளாது விலகியோடினர். அவர்கள் தங்கள் இருதயத்தை கடினமாக்கினபடியால், அத்திமரம் எப்படி திராட்சத்தோட்டத்தில் நின்றதோ, அதுபோன்று புறஜாதியினரும் பேறுபெற்றனர். தோட்டத்திற்குள் வந்தமட்டும் புறஜாதியினரும் கனிகொடுக்க வேண்டும்!

## ஒலிவமரம்!

ஒலிவமரம் இஸ்ரவேலில் ஒரு முக்கியமான பயிராகும். ஒலிவமரத் தோப்புகளும் திராட்சத்தோட்டங்களும் இஸ்ரவேலில் எங்கும் பயிரிடப்படுகிறது. ஒலிவ விதையிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்கப்படுகிறது. ஒலிவ எண்ணெய் உலகம் முழுவதும் நன்கறியப்பட்டதாகும்.

ஒலிவமரம் ஒரு பணம் தரும் பயிர்வகை (cash crop) ஆகும். வேதாகமத்தில் ஒரு நிகழ்வைப் பார்க்கிறோம். இஸ்ரவேலின் தீர்க்கதரிசி ஒருவர் மரிக்கும்போது கொஞ்சம் கடனை விட்டுச் சென்றார். கடன் கொடுத்தவர்கள் தீர்க்கதரிசியின் மனைவியை நெருக்கினார்கள். கடனை அடைத்திடவும் இல்லையெனில் அவர்கள் இரு மகன்களையும் அடிமைகளாகக் கொண்டுபோவதாக மிரட்டினார்கள். செய்வதறியாமல் தவித்த தீர்க்கதரிசியின் மனைவி, எலிசா தீர்க்கதரிசியிடம் சென்று முறையிட்டாள். தீர்க்கதரிசி அவளைப் பார்த்து, “நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? உனக்கு வீட்டில் என்ன இருக்கிறது?” என்றார். வீட்டில் ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் வேறு ஏதும் இல்லை என்றாள். பக்கத்து வீடுகளிலிருந்து எவ்வளவு காலி பாத்திரங்கள் வாங்கமுடியுமோ அவ்வளவு வாங்கு என்றார். அவள் அவ்வாறே செய்தாள். கதவை பூட்டிவிட்டு குடத்தில் இருக்கும் எண்ணெயை எல்லா காலிப் பாத்திரங்களிலும் ஊற்றுமாறுச் சொன்னார். அவள் அவ்வாறே ஊற்றிக்கொண்டிருக்க இனி காலிப் பாத்திரங்கள் இல்லையென்று மகன் சொல்ல குடத்தில் எண்ணெய் நின்றுவிட்டது! எண்ணெயை விற்று கடனை அடைத்துவிட்டு, எஞ்சியதைக் கொண்டு ஜீவனம் பண்ணு என்றார் தீர்க்கதரிசி (2 இராஜாக்கள் 4:1–7). ஒலிவ எண்ணெய் அவள் கடனை அடைத்துத் தீர்க்க உதவியது!


நெகேமியா வேதாகம மாலை நேரக் கல்லூரி

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை

போதனா மொழி : தமிழ்

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd.: 1969

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

ரோமர் 11:17ல், புனித பவுல், புறஜாதியார் இரட்சிப்பு இஸ்ரவேலரின் கீழ்ப்படியாமையால் வந்தது, ஏனெனில் இஸ்ரவேலர் தங்கள் இரட்சகரைத் தள்ளிவிட்டார்கள். ஒலிவ மரத்தின் கிளைகள் சில முறிக்கப்பட்டிருக்க, காட்டொலிவ மரமாகிய நீ (புறஜாதியர்) அவற்றில் ஒட்டப்பட்டிருக்க, ஒலிவ மரத்தின் வேருக்கும் சாரத்திற்கும் பங்காளியாயிருக்கிறாய் என்றார்.

இயேசு சொன்னார், “இரட்சிப்பு யூதர் வழியாய் வருகிறது” (யோவான் 4:22). “இஸ்ரவேலரின் இதயக் கடினம், புறஜாதியாரின் இரட்சிப்பு பூரணமாகுமட்டும் இருக்கும்” என்று பவுல் கூறுகிறார் (ரோமர் 11:25). எனவே, புறஜாதியார் இத்தருணத்தைப் பயன்படுத்தி தேவராஜ்யத்திற்குள் செல்ல தகுதியுடையவராகிக் கொள்ளுமாறு கேட்கிறார்.

தேவனாகிய கர்த்தர் தமது ஜனங்களை உலகத்திலிருந்து பிரித்தெடுத்து சில சிறப்பான ஆசீர்வாதங்களைக் கொடுத்துள்ளார். “தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே” (ரோமர் 11:29). ஆகவே, மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவபக்தியை இஸ்ரவேலிலிருந்து நீக்கிப் போடுவார்!

தேவ ஜனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட (rapture) பின், இஸ்ரவேலருக்கு தேவராஜ்யம் செல்ல ஒரு தனிவாய்ப்பு அளிக்கப்படுகிறது. கர்த்தரின் வருகையில் ஆயத்தமுள்ளோர் எடுத்துக் கொள்ளப்பட்டதும், நான்கு தூதர்கள் பூமியின் நான்கு திசைகளிலுள்ள காற்றை பூமியின் மேலும், கடல் மற்றும் எந்த மரத்தினாலாவது வீசாதபடி பிடித்திருந்தார்கள். உயிரோடிருக்கும் தேவனின் இன்னொரு தூதன், மகாச் சத்தமாய் கூப்பிட்டு, “பூமியையும், கடலையும், மரங்களையும் நாங்கள் தேவனுடைய ஊழியக்காரர் நெற்றிகளில் முத்திரை போட்டுத் தீருமட்டும் துன்புறுத்த வேண்டாம்” என கேட்டுக் கொண்டது. ஒரு கோத்திரத்திற்கு 12,000 வீதம் மொத்தம் முத்திரை போடப்பட்டவர்கள் 1,44,000 பேர். முத்திரை போடப்பட்டவர்களில் தாண் கோத்திரம் இல்லை; அதற்குப் பதிலாக மனாசே கோத்திரம் உள்வந்தது. இந்த முத்திரை போடப்பட்டவர்கள், அந்திக் கிறிஸ்துவின் உபத்திரவ காலம் முதல் 3½ வருடங்கள் முடியும்போது பரலோகம் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்!

முத்திரை போடப்பட்ட இந்த 1,44,000 பேர்களும் இயேசுவுக்கு விசேஷித்தவர்கள். இவர்கள் ஸ்திரீகளால் தங்களை கறைபடுத்திக் கொள்ளாதவர்கள். அப்படியென்றால், இவர்கள், வெளிப்படுத்தல் 17ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மகாவேசியால் (விக்கிரக ஆராதனை) தீட்டுப்படுத்தப்படாதவர்கள்! அவர்கள் சிங்காசனத்தின் முன்பாக புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்கப்பட்ட 1,44,000 பேர்களுக்கு மட்டும் தெரிந்ததேயல்லாமல் மற்றவர்களுக்குத் தெரியவில்லை. சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின் இயேசுவுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அணியினர் இவர்கள் ஆவர்.

இவர்கள் வருகையின்போது கைவிடப்பட்டவர்கள். வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் அளவிற்கு இவர்களுக்கு தகுதி/ ஆயத்தம் இல்லாமல் இருந்தது. இவர்கள் கர்த்தருடைய வசனத்தில் உறுதியுடன் நிலைத்திருந்ததோடு மட்டுமில்லாமல் விக்கிரகங்களால் தங்களை கறைபடுத்திக் கொள்ளவில்லை. இங்கு தேவனாகிய கர்த்தர் இவர்களுக்கு ஒரு விசேஷித்த சிலாக்கியத்தை அளித்துள்ளார்!

## யூதா இரட்சிக்கப்பட இறுதி வாய்ப்பு!

வருகையிலும், 1,44,000 பேர் எடுத்துக்கொள்ளப்பட்டபோதிலும் கைவிடப்பட்ட யூதர்களை இரட்சிக்க தேவன் கரிசனையுள்ளவராகவே இருக்கிறார். வேதம் சொல்கிறது, “தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே” (ரோமர் 11:29). மேசியாவை யூதர்கள் தள்ளிவிட்டாலும் தேவன் அவர்கள்மேல் இரக்கம் உள்ளவராயிருக்கிறார்! வேதம் சொல்கிறது:

“நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்” (சகரியா 12:10).

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்விகள்

இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.

“புதுவாழ்வு – உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.

மேலும் விவரங்களுக்கு :

தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி

10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.

தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766

கைபேசி: (+91) 98410 71852, 95661 31858

மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in


## வருமான வரி விலக்கு

இந்தியா வருமான வரிச்சட்டம் பிரிவு 80G –கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G –யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்புங்கள். மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code No | : SBIN 0000249 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## சிறு பிள்ளைகளை நேசிக்கும் இயேசு ஆண்டவர்!

### வளர்ப்பு

நான் 03.06.1949 அன்று பிறந்தேன். குடும்பத்தில் முதல் ஆண் குழந்தை என்பதால் என்னை ஒரு கிறிஸ்தவப் போதகராகும்படி விரும்பி அதற்கு ஏற்றபடி என் தாத்தா, பாட்டி மற்றும் குடும்பத்தினர் ஜெபத்திலும், வேத அறிவிலும் வளர்த்தனர்.



ஆலயத்தில் நடைபெற்ற சிறுவர் ஞாயிறு பள்ளி ஆகியவற்றில் என்னைக் கட்டாயமாக ஈடுபடுத்தினர். நான் வளர்ந்த தேவாலயம், வயல்கள் மத்தியில் இருந்தபடியாலும், சாலை வசதிகள் இல்லாதபடியாலும், என்னைத் தங்கள் தோளில் உட்காரவைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும், இதர நாட்களிலும் தேவாலயத்திற்கு என் தாய் மாமன்மார் அழைத்துச் சென்றனர். என் தாயாரும், சித்தியும் எனக்குத் துணையாக இருந்தார்கள்.

ஞாயிறு பள்ளி ஊழியர்கள் மறைதிரு. எலியாஸ், பேபி, டெய்ஸி, ரெத்னம் அக்கா, ஞானசெல்வம் சித்தி, கிரேஸ் ஆகியோர் என் சிறுபருவத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கு நேராக என்னை வழிநடத்தினர். அப்போது நான் அறிவில் குன்றியவனாகவும், பெலவீனபட்டவனாகவும் இருந்தபடியால் என்னை இவர்கள் அதிகமாய் நேசித்தார்கள்.

ஒரு வருங்கால தேவ ஊழியரை உருவாக்குகிறோம் என்ற பூரண நம்பிக்கையால் ஞாயிற்றுக்கிழமைதோறும் காலையிலும், பகலிலும், மாலையிலும் நடைபெறும் எல்லா ஆலய ஆராதனைகளிலும், நிகழ்ச்சிகளிலும் ஈடுபாடு கொள்ள என் தாயார் அதனை ஓர் முழுநேர ஊழியமாகச் செய்தார்கள்.

என்னை என் தாயார், ஆலயத்தில் தன் பக்கத்திலேயே மிகுந்த கண்டிப்புடன் உட்கார வைத்து பாடல்களைப் பாடவும், வேத வசனப் பிரசங்கங்களை உன்னிப்பாக கவனிக்கவும் செய்தார்கள். அந்த காலத்தில் நெய்யூர் தலைமை சபையில் முதன்மைப் போதகராக இருந்த மறைதிரு. I.R.H. ஞானதாசன் அவர்கள் என்னைப் பிரதிஷ்டை செய்து எஸ். சாம் செல்வ ராஜ் என்றப் பெயரை சூட்டி "இவன் வருங்காலத்தில் ஒரு சாமுவேலாகவும், செல்வந்தனாகவும், முன்னணி தேவ ஊழியர்களில் ஒருவனாகவும் இருப்பான்" என்று ஆசீர்வதித்தார்கள்.

அந்த நாட்களில் கிறிஸ்மஸ் பண்டிகை என்றால் எனக்கும், என் பெற்றோருக்கும் மிகுந்த சந்தோஷமாக இருக்கும். ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மஸ் அன்று பிள்ளைகள் வேத வசனங்களை மனப்பாடமாக ஒப்புவிப்பதும், பரிசுகளைப் பெறுவதும் வழக்கமாயிருந்தது. 1952–ம் வருட கிறிஸ்மஸ் அன்று நான் தேவாலயத்தில் மனப்பாடமாக சொன்ன வசனம் லூக்கா 2:13.

**"அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி:"** என்பதாகும்.

1956–ம் ஆண்டு சுமார் ஏழு வயதாக இருக்கும்போது ஒரு நாள் கனத்திற்குரிய திரு. தேவதாஸ் என்ற எங்கள் உபதேசியார், ஆலயத்தில் பிரசங்கம் பண்ணும்போது தேவ ஆவியானவர் பிரத்தியட்சமாக என்னில் வெளிப்பட்டார். தேவன் என்னை நேசித்தார் என்கிற செய்தி என் உள்ளத்தில் மென்மையாகவும், தெளிவாகவும் கேட்டதால், அதை தாங்கமுடியாதவனாய் மிக உரத்த சத்தத்துடன் அழுதேன். அப்போது தேவப் பிரசன்னம் என்மேல் இறங்கியதை தேவன் உணரச் செய்தார். இதை என் தாயார் உற்று கவனித்துக் கொண்டு இருந்தார்கள்.

ஆராதனை முடிந்தவுடன், என் தாயாரிடம், "அம்மா! இந்தப் போதகர் பரலோகம் சென்று நம் இயேசு அப்பாவைப் பார்ப்பார் அல்லவா?" என்ற கேள்வியைக் கேட்டேன். அதற்கு என் தாயார் "ஆம், மகனே!" என்றார்கள். நான் உடனே, "எனக்கும் பரலோகம் செல்ல ஆசை! அங்கு இயேசப்பாவைப் பார்க்க வேண்டும்! முடியுமா அம்மா?" என்று கேட்டேன். "உலகத்தில் வாழும் இந்தக் காலத்தில் அவரை நம்பி அவரை ஏற்றுக் கொண்டால் கட்டாயம் நடக்கும்" என்று என் தாயார் புன்முறுவலுடன் பதில் அளித்தார்கள்.

இப்படியாக, என் தாயார் இயேசு கிறிஸ்துவை என் இருதயத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள எனக்கு உதவினார்கள். அன்று முதல் எனக்குள் ஓர் வித்தியாசமான ஆவி செயல்படுவதையும், தேவப் பிரசன்னத்தை எப்போதும் என்னால் உணரவும் முடிந்தது.

நான் என் ஊரில் உள்ள கண்ணாட்டுவிளை அரசு ஆரம்பப்பள்ளியில் 1–ம் வகுப்பில் தமிழ் முதற்பாடமாக வைத்து சேர்க்கப்பட்டேன். என் பாதுகாப்பிற்காக என் பாட்டி தினமும் அப்பள்ளியில் என்னை அழைத்துச் சென்றுவிட்டு, மாலையில் திரும்ப வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். ஒவ்வொரு நாள் காலையிலும், நான் பள்ளிக்கூடத்திற்கு புறப்படும்போது என் அன்புத் தாயார் தன் வலதுகையை என் தலையின் மீது வைத்து, "ஆண்டவரே! இன்று என் மகன் கற்கும் பாடங்கள் வருங்காலத்தில் உம்முடைய இராஜ்யம் பிரபல்யத்திற்காக அமைய வேண்டும்" என்று மிகவும் ஆசையாய் ஜெபம் பண்ணி அனுப்புவார்கள்.

வருங்கால தேவ ஊழியர் என்ற எதிர்பார்ப்பால் அங்குள்ள ஆசிரியப் பெருமக்கள் என்னை அதிகமாய் நேசித்து சிறந்த கல்வி அளித்தனர். ஆனால் நான் குறும்பு செய்யும் பிள்ளையாக இருந்தேன். ஆசிரியர்களான திரு. செல்வமணி, திருமதி தங்கம்மாள் ஜான், திருமதி டல்சி ஜோசப், மற்றும் திருமதி இராஜம்மாள் ஆகியோர் எனது வளர்ச்சியில் அதிக பங்கு ஆற்றினர்.

1957–ம் ஆண்டு கிறிஸ்மஸ் அன்று தேவாலயத்தில் வசனம் சொல்லும் பிள்ளைகள் பட்டியலில் என் பெயர் இல்லை என்றும், கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த வருடம் எனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்றும் சிறுவர் ஊழியப் பள்ளி தலைமை ஆசிரியை ரெத்னம் அக்கா அவர்கள் தெரிவித்தார்கள்.

**அழைப்பின் எதிரொலி யூடியூப்**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

மனம் உடைந்துபோன நான், என் தாயாரிடம் சென்று என் ஆழ்ந்த வருத்தத்தை அழுகையுடன் தெரிவித்தேன். அவர்களும் சற்று வேதனையுடன், "வருகிற வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களிலும் இரவு நேர ஆகாரத்தை சற்று குறைத்து, இயேசு அப்பாவிடம் தனியாகச் சென்று என்னிடம் இப்போது சொன்னதுபோல் முழங்காலில் நின்று ஜெபம் பண்ணி இயேசு அப்பாவிடம் சொல்" என்று எனக்கு 2 பாடல்களையும் கற்றுக் கொடுத்தார்கள். அப்பாடல்கள்

**I. "இயேசுவை நேசிக்கும் பிள்ளை மோசத்தில் கலங்கவில்லை**

**கூண்டில் குருவிக்கொப்பாகக் காப்பாரே தம் சேவைக்காக..."**

மற்றும்

**II. "என் ஆத்தும நேச மேய்ப்பரே! என் உள்ளத்தின் ஆனந்தமே!**

**இன்னும் உம்மைக் கிட்டிச் சேர நான் வாஞ்சையோடு சமீபிக்கிறேன்**

**பல்லவி**

**பேசும், பேசும் ஜெபம் செய்யும்போது ஆண்டவா!**

**பிரியமானதை இப்போ காட்டும், செய்ய ஆயத்தம்.**

**1. மெய் மீட்பருக்குக் கீழ்ப்படிவோர் தம் ஆத்துமத்தை தேற்றும் இடம்**

**அடியேனும் பெற அருள்வீர் அன்பரே விண்ணப்பம் கேட்டிடும் –பேசும்**

**2. பாவிகட்கு உமது அன்பை என் நடையால் காட்டச் செய்யும்**

**கல்வாரி ஆவியால் என் உள்ளத்தைப் போரில் வெல்ல அபிஷேகியும் – பேசும்**

**3. என் ஜீவிய நாட்கள் எல்லாம் நீர் சென்ற பாதையில் செல்லுவேன்**

**ஆசித்துத் தாரேன் எனதெல்லாம் மீட்பரே வல்லமை தந்திடும் – பேசும்"**

இப்பாடல்களை அந்த மூன்று நாட்களுமே பாடி இயேசு அப்பாவிடம், தேவாலயத்தில் கிறிஸ்மஸ் அன்று ஒரு வசனம் சொல்ல ஏற்பாடு செய்ய அழுகையுடன் வேண்டிக் கொண்டேன்.

முதல்முறையாக என் ஜெபத்தை தேவனாகிய கர்த்தர் கேட்டு பதிலளித்தார். அந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் ஆலயத்திற்கு செல்லும் வழியில் எங்கள் குடும்பத்தை எங்கள் போதகர் தேவதாஸ் அவர்கள் சந்தித்தார்கள். அப்போது திடீரென்று என்னை நோக்கி "இந்த கிறிஸ்மஸ்க்கு என்ன வசனம் அல்லது பாடல் உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது?" என்று கேட்டார்கள். என் தாயார் "ஒன்றும் இல்லை" என்றார்கள்.

உடனே அந்தப் போதகர் மற்றப் பிள்ளைகள் எல்லாரும் ஒவ்வொரு வசனம்தான் மனப்பாடமாகச் சொல்வார்கள்; ஆனால் நீயோ 23–ம் சங்கீதம் முழுவதையும் கிறிஸ்மஸ் அன்று தேவாலயத்தில் மனப்பாடமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். நானும் குறிப்பிட்ட தினத்தில் நடைபெற்ற ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு மேற்படி சங்கீதத்தில் உள்ள 6 வசனங்களையும் தவறு இல்லாமல் அப்படியே மனப்பாடமாக சொன்னதால், என்னை முதல் மாணவனாகத் தேர்ந்தெடுத்து எனக்கு ஒரு அழகிய சோப் பெட்டியை பரிசாக வழங்கினார்கள்.



இந்நிகழ்ச்சி எனக்கு மனதில் பெரிய உற்சாகத்தையும், தைரியத்தையும், இயேசு கிறிஸ்துவின் மேலும், ஜெபத்தின் மேலும் ஓர் ஆழமான நம்பிக்கையையும், விசுவாசத்தையும் ஏற்படுத்தியது.

"என்னை நோக்கிக் கூப்பிடு ..." (எரேமியா 33:3) என்ற வேதவசனம் எனக்கு வழிகாட்டியாய் மாறிவிட்டது. அன்று முதல் நான் ஜெபத்தில் தேவனுடன் உறவாட ஆரம்பித்தேன்.

*************

... 7–ம் பக்கத் தொடர்ச்சி

யூதர்கள் மேசியாவை தள்ளிவிட்டபோதிலும், தேவனாகிய கர்த்தர் அவர்கள்மேல் கிருபையின் ஆவியையும் விண்ணப்பத்தின் ஆவியையும் ஊற்றச் சித்தமானார். அவர்கள் தங்கள் தகாதச் செயலுக்கு வேதனை தெரிவித்தார்கள். எனினும், அந்திக்கிறிஸ்துவின் கடைசி 3½ வருட ஆட்சியின்போது யூதரில் மூன்றில் இரண்டு பங்கு பேர் மரித்துப் போவார்கள், மூன்றில் ஒரு பங்கு பேர் காக்கப்படுவார்கள்! அதுவும் அக்கினியில் அகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்! அதாவது கடினமான சோதனை வழியாக கடந்து வருவார்கள்! (சகரியா 13:8,9).

யூதராயிருந்தாலும் மற்றவர்களாயிருந்தாலும் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்! வருகைக்குப்பின், தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்க இரத்தசாட்சியாய் மரிக்கிறவர்கள் மற்றும் யூதர்களுக்கு மட்டும் ஒரு தருணம் (chance) கொடுக்கப்படுகிறது. அதுவும், கடுமையான சோதனை வழியாகவே! ஆகவே, இன்றே அனுக்கிரக நாள்; இன்றே இரட்சண்ய நாள்! இயேசுவை பற்றிக்கொள், அவருடைய பிள்ளையாய் பரிசுத்தமாய் ஜீவனம் செய், அப்படிச் செய்தால் வருகையில் நிச்சயம் எடுத்துக் கொள்ளப்படுவாய்.

இஸ்ரவேலரின் ஜீவியத்தில் திராட்சச் செடி முக்கியப் பங்கு வகிக்கிறது. இது உழைப்பு மிகுந்த ஒரு தொழில். ஏராளம் பேர் இதில் ஈடுபட்டுள்ளனர். திராட்சப் பழம் கல்யாண வீடுகளிலும், இல்லங்களிலும் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.

அத்திமரம் உயர்ந்து வளர்ந்து தனது கிளைகளை நாலாப் பக்கங்களிலும் விடும். இஸ்ரவேலில் பெருமளவில் பயிரிடப்படுகிறது. இவை இந்தியாவிலும் வளருகிறது. இது விரும்பிச் சாப்பிடும் உணவு வகையாகவும் மருத்துவ குணமுள்ளதாகவும் இருக்கிறது.

ஒருமுறை இயேசுவும், சீஷர்களும் பெத்தானியாவை விட்டு வெளியேச் செல்கையில் இயேசுவுக்குப் பசி உண்டாயிற்று! அங்கே முழுவதும் இலைகளால் நிறைந்த ஓர் அத்திமரத்தைக் கண்டார். அதில் பழங்கள் இருக்கின்றனவா என்று இயேசு உற்றுப் பார்த்தார்; ஆனால் ஒன்றும் இல்லை. அப்பொழுது இயேசு, "இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன்" என்றார் (மாற்கு 11:12–14).

திராட்சத்தோட்டத்தில் அத்திமரம் நிற்பது யூதர்களுடன் புறஜாதியார் ஒட்டவைத்திருப்பதற்கு ஒப்புடைமையுடையது. யூதர்களின் இரட்சிப்பில் கர்த்தர் தமது மகா இரக்கத்தினால் அதனை புறஜாதியாருக்கும் அளித்தார். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புறஜாதியார் நல்ல கனிகளைக் கொடுக்கவேண்டும், தவறினால் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுவார்கள்!

கனி கொடுக்காத சீசனில் இயேசு கனியைத் தேடினார். சீசன் அல்லது சீசன் இல்லாத நேரத்திலும் கர்த்தர் ஒருவரிடம் கனியைத் தேடுகிறார். சீசன் அல்லாத நேரத்தில் கனி கொடுப்பதுதான் சிறப்பு!

ஒலிவமரம் பணம் அளிக்கும் பயிர் (பணப்பயிர்– cash crop). இஸ்ரவேல் எங்கும் இது பயிராகிறது. இது தனது எண்ணெயால் அறியப்படுகிறது. இதன் எண்ணெய் சமையலுக்கும், தேவாலயத்தில் விளக்கெரிக்கவும், மருந்துகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஒருவர் இதனைத் தொடர்ந்து முகத்தில் பூசிவந்தால் முகம் களைகட்டும்! (glow).

**மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும்,**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

**அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும், மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்** (சங்கீதம் 104:15).

நாம் வாழும் தேசத்திற்கு நாம் திராட்சச் செடிபோலவும், அத்திமரம் போலவும், ஒலிவமரத்தைப் போலும் பலன்கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும்! எல்லாவற்றிற்கும் மேலாக நமது மீட்பர் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல கனிகளைக் கொடுத்து ஜீவிப்போமாக! அல்லேலுயா!

★★★

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❋ வருட சந்தா ரூ. 100/–** **❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரும்பி அளிக்கும் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் தங்களை ஏவும் விதத்தில் தாங்கள் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களைத் தாங்குங்கள். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATIONS ON ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th FEBRUARY 2022**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

***GOD BLESS YOU!***

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**